**02.12.2024**

**அ.வ.எண். 38/2021**

**வா.சா.3 ஏழுமலை அவர்களின் குறுக்கு விசாரணை**

**1**. தாவா சொத்து என்ற வார்த்தையின் அர்த்தம் வழக்கு சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா சொத்துகளை "எ" அட்டவணை மற்றும் "பி" அட்டவணையாக காண்பித்துள்ளார்களா என்றால் சரிதான். தாவா "எ" அட்டவணை சொத்தின் கிழக்கு பக்கம் தார் சாலை, மேற்கு பக்கம் லட்சுமி நாராயண கோவில் நிலம், தெற்கு பக்கம் யாருடைய நிலம் என்று தெரியாது, வடக்கு பக்கம் மாரியப்பன் சொத்து. புறம்போக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் **20** செண்ட். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை.

**2**. சாட்சியம் அளிக்க என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் ஐயர் என்னை அழைத்து வந்தார். அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. சாலைக்கும் தாவா எ அட்டவணை சொத்திற்கும் இடையே புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். அது மேய்க்கால் புறம்போக்கு என்றால் எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் **90** செண்ட் என்றால் இல்லை. வாதி, பிரதிவாதி என்ற வார்த்தையின் அர்த்தம் எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே முன்

விரோதம் உள்ளதாக சொல்லியுள்ளதால் அது என்ன முன் விரோதம் என்றால் புறம்போக்கு நிலம் கல்லும்முள்ளுமாக இருந்ததை விற்பனை செய்துவிட்டார்கள். ஐயர் அந்த நிலத்தினை வாங்கி சமபடுத்தி சொட்டு நீர் பாசனத்திற்காக குழாய்களை வைத்தார். தற்போது விற்பனை செய்தவர்கள் அந்த நிலத்தினை கோருகிறார்கள்.

3. மேற்படி விவரத்தினை எனது பிரமாணவாக்கமூலத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் புறம்போக்கு நிலத்தின் விஸ்தீரணம் 20 செண்ட் என்று கூறுகிறேன் என்றால் தோராயமாக சொல்கிறேன். அதற்கு கூடுதலாகவும் இருக்கலாம், குறைவாகவும் இருக்கலாம். இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரியும்.

4. தாவா "எ" அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி அழைத்ததன் பேரில் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.